DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO.255/2017 PW 1

Name மல்லி Age

Father's Name Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

19.01.2024.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ஏற்கனவே செய்த குறுக்கு விசாரணையின் போது சொல்லப்பட்ட 24.10.1979 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரம் அசல் கொண்டுவந்துள்ளேன். அதன் நகல் வாதசாஆ 9. எனது அப்பா செல்லப்ப ரெட்டி மற்றும் எனது சித்தப்பா சுப்பிரமணி ரெட்டி இருவரும் சேர்ந்து தான் வாதசாஆ 9 செட்டில் மென்ட் பத்திரம் எழுதி கொடுதார்கள் என்றால் சரிதான். அந்த பத்திரம் முன்னிலைக்கு 92 சென்ட் எனக்கு செட்டில்மென்ட் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கும் சித்தப்பாவிற்கு மேற்படி சொத்து எப்படி கிடைத்தது என்று எனக்கு தெரியாது. தாவா செத்துக்கள் எதுவும் எனது அப்பாவின் பித்துராஜிதா சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு 3.5 ஏக்கர் சொத்து பாகத்தில் கிடைத்தது என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தில் வந்த 92 சென்ட் நிலத்தை மேற்படி ஆவணத்தில் எனக்கு செட்டில்மென்ட் செய்துவைத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனவே மீதியிருக்கும் சொத்துக்கள் எனது தம்பிக்கு பாகம் என்று சொன்னால் சரிதான். 2013ல் என் தகப்பனார் இறக்கும் போது என்ன வயது என்று எனக்கு தெரியாது. எனக்கு 29வயது இருக்கும் போது அவர் இறந்துபோனார். தற்போது எனக்கு 59 வயது ஆகும். எனது தகப்பனார் கழனி வேலை செய்தார். எனது தம்பிகள் விவசாயம் செய்தார்கள். தனியாகவும் செய்தார்கள். என் தகப்பனாருடனும் செய்தார்கள். இரண்டாம் பிரதிவாதி நடராஜரெட்டி விவசாயம் செய்தார்கள் என்றால் சரிதான்.

எனது சகோதரர்கள் விவசாயம் மூலம் கிடைத்த வருமானத்தை வைத்து என் தகப்பனார் பெயரில் சொத்துக்கள் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. அவர்கள் வாங்கிய சொத்துக்கள் அவர்கள் பெயரிலேயே வாங்கப்பட்டது. எனது தகப்பனார் பெயரில் 13 ஏக்கர் சொத்துக்கள் உள்ளது. அவர்கள் பெயரில் கிரையம் பெறப்பட்ட கிரைய பத்திரங்கள் அவர்களிடம் தான் உள்ளது. எனது மூன்று சகோதரர்களுக்கும் தலா 4 ஏக்கர் சொத்துக்கள் எனது தகப்பனார் கொடுத்துவிட்டார். வாய்மொழியாக கொடுத்துவிட்டார். ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்திகொள்ளவில்லை. எப்போது அதுபோல் வாய்மொழியாக பிரித்து கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் என் தகப்பனார் பெயரில் எனது சகோதரர்கள் கிரையம் பெற்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு அந்த வயது இல்லை. அதுபோல் கிரையம் பெற்ற சொத்துக்களை மூன்று பேரும் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் தனிதனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனவே தாவா சொத்தில் பொது சொத்துக்கள் கிடையாது என்றாலும் எனக்கு பாகம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதி சிறியவராக இருந்தபோதும் அவர் தான் குடும்பத்தை பார்த்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன்களின் படிப்பு மற்றும் மருத்துவ செலவிற்க்கு இரண்டாம் பிரதிவாதி எனக்கு செலவு செய்துவந்தார் என்றால் எனக்கு ஒரு ரூபாய் கூட அவர் கொடுத்ததில்லை. ( சாட்சி உணர்ச்சிவாசபட்டு இரண்டாம் பிரதிவாதி தன்னை ஏமாற்றிவிட்டதாக கூறினார்.) இரண்டாம் பிரதிவாதியின் மகள்களை எனது மகன்களுக்கு கொடுக்காத காரணத்தினால் என் கணவர் சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் காலத்திலேயே சொத்து பிரிக்கப்பட்டுள்ளது என்றாலும் இந்த வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திலிருந்து எனக்கு எந்த வருமானமும் கொடுக்கவில்லை. 1979லிருந்தே கொடுக்கவில்லை. நான் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக தவறாக சொல்லுகிறேன் என்றாலும் நீதிமன்ற கட்டணம் தவறாக செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே

எங்களுக்கு பாகம் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதிகள் 4 மற்றும் 6 தரப்பில் நீதிமன்ற காப்பாளர் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டதாக கூறினார்.)